# <u>Sub Court, Eraniel</u>

**O.S. No.** 46/ 2023
**Date**: 25.08.2025.
வா.சா.1 - திரு. டிக்சன் ஜினோ
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1 முதல் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் நான், எனது பெயரில் உள்ள சொத்தினை பிரதிவாதிகள் தவறாக எழுதி எடுத்தது சம்பந்தமாக பரிகாரம் கோருகிறேன். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் வசித்துவருகிறேன் என்றால், சரிதான். அது என்னுடைய பூர்வீக வீடாகும். வழக்கின் 1ம் பிரதிவாதி எனது சித்தப்பாவின் மனைவி மற்றும் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் அவரின் மகன்கள் என்றால், சரிதான். பிரதிவாதிகளின் வீடு எனது வீட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ளது. வழக்கு சொத்து மற்றும் பல சொத்துகள் எனது தாத்தா செல்லம், எனது தகப்பனார் பால்ராஜ் மற்றும் அவருடைய இரண்டு சகோதரர்கள் துரைராஜ் மற்றும் தங்கராஜ் மகன் ஜெயகுமார் பெயரில் எழுதிவைத்தது என்றால், சரிதான். எனது தாத்தா செல்லத்திற்கு வாரிசு இல்லை என்ற காரணத்தினால் அவருடைய அண்ணன் மகன்களான பால்ராஜ், துரைராஜ் மற்றும் தங்கராஜ் மகன் ஜெயகுமார் ஆகியோர் பெயரில் எழுதி வைத்த சொத்து என்றால், சரிதான். எனது தாத்தா 1994 ல் உயில் எழுதி வைத்தார். அந்த உயில் வா.சா.ஆ–2 ஆக தாக்கல் செய்திருக்கிறேன். தற்போது நான் இருக்கும் வீட்டின் வடக்கு பக்கம் 8 3/4 சென்ட் காலி மனை எனது அனுபவத்தில் உள்ளது என்றால், சரிதான். எனது வீட்டின் சர்வே எண்.418/22. தற்போது சாட்சி அது வீட்டின் மேற்கு பக்கம் உள்ள காலிமனை 8 3/4 சென்டின் சர்வே எண்.418/4 என்று கூறுகிறார். எனது

தாத்தா எழுதிய உயிலின் மூலமாக தான் எனது தகப்பனார் பால்ராஜ்க்கு உரிமை கிடைத்தது என்றால் சரிதான். எனது தாத்தா 2004 ல் இறந்தார். வருடம் சரியாக நினைவில் இல்லை. எனது தகப்பனார் 1995 ல் இறந்துவிட்டார். வருடம் சரியாக நினைவில் இல்லை. ஆனால் எனது தகப்பனார் எனது தாத்தாவிற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால், சரிதான். பிரதிவாதிகள் தற்போது வசித்துவரும் வீடானது 1995 ல் முதல் குடிவசித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல, 2000 ம் வருடத்திற்கு பிறகு தான் அந்த வீட்டிற்கு வந்தார்கள். 1995 ல் முதல் பிரதிவாதிகள் அங்கு வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–9 பட்டா எண் நான் கைபட எழுதிக்கொடுத்த மனுவின் பெயரில் தான் வழங்கப்பட்டது என்றால், சரிதான். வா.சா.ஆ–8 ரசீதும் நான் மனு செய்து பெற்றேன் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–8 மற்றும் 9 ஆகிய இரண்டிலும் சர்வே எண்.418/22 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மற்றும் அதன் விஸ்தீரணம் 3.50 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், சரிதான். தற்போது காட்டப்படும் வா.சா.ஆ–3 எனது தாயார் மற்றும் சகோதரர்கள் ஆகிய மூவரும் எனக்கு 19.12.2011 ல் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் என்றால், சரிதான். அதில் சொத்து விபரத்தில் 418/22 என்றும் விஸ்தீரணம் 3.50 ஏர்ஸ் என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பிரதிவாதிகளின் 18.10.2022 ல் ஏற்பட்ட பாகபத்திரம் வா.சா.ஆ–4 னை ரத்து செய்ய வேண்டி நான் இந்த வழக்கு செய்கிறேன் என்றால், சரிதான். வா.சா.ஆ–4 ல் பக்கம் 8 ல் பிரதிவாதிகள் இருக்கும் சொத்துவிபரத்தில் 418/27– 3 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த பத்திரத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் துரைராஜ்க்கு ,

செல்லம் கிரைய ஆவண எண்.822/2000 ன் அடிப்படையில் உரிமை ஏற்பட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், சரிதான். அந்த கிரைய ஆவணத்தினை ரத்து செய்ய வேண்டும் என்று நான் பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றால், சரிதான். எனது தாத்தா இறந்த ஈமசடங்கிற்கு பிரதிவாதிகள் மற்றும் அவர்கள் குடும்பமாக வந்திருந்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படுவது 3 ம் பிரதிவாயின் திருமணத்திற்கு, 2017 ல் நான் எனது மனைவி மற்றும் அம்மாவுடன் கலந்துகொண்ட சமயத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் எண்ணம்–3 என்றால் சரிதான். அது பி.வா.ச.ஆ 1 ன் வரிசை. நான் சர்வே எண்.418/22 நிலத்தை சர்வே எண்.418/27 ஆக போலியாக மாற்றியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். அது வா.சா.ஆ–6 மற்றும் வா.ச.ஆ–7 என்றால், சரிதான். அந்த புகாரின் அடிப்படையில் என்னையும், பிரதிவாதிகளையும் அழைத்து விசாரித்தார்கள். நான் எனது ஆவணத்தினை எடுத்துவருவதாக கூறி காவல் நிலையத்தில் நான் காலஅவகாசம் கேட்டேன் என்றால், சரிதான். ஆனால் அவகாசம் கேட்ட நான் பின்னிட்டு விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால், சரியல்ல. எனது உடன் பிறந்த சகோதரன் அந்த சமயத்தில் குளச்சல் காவல் நிலையத்தில் PC Driver ராக இருந்ததார் என்றால், சரிதான். பிரதிவாதிகளின் ஆவணம் சரியாக இருந்ததால் தான் நான், விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண் தவறுதலாக இருப்பதாக மாவட்ட ஆட்சியரிடம் 25.11.2022 ல் வா.சா.ஆ–5 புகாரினை கொடுத்தேன் என்றால் , சரிதான். நான் வருவாய் துறையில் கொடுத்த மனுவின் நகலை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் வருவாய் துறையில் , புலஎண் ஒப்பீடு முறைக்கு

கொடுக்கப்பட்ட மனு சரியாக கொடுக்காத காரணத்தினால் தான், நான் அந்த மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அந்த மனுவின் நகல் என்னிடம் இல்லை. எனது தாத்தா எழுதிய உயிலின் 3ம் பக்கத்தில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதனை பயனாளிகள் சரிசெய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது என்றால், சரிதான். எனது தாத்தா உயிருடன் இருக்கும் வரையில், அவருடைய வீட்டில் தான் நாங்கள் இருந்தோம். எனது தாத்தாவிற்கு உயில் சொத்தினை தவிர, கைவசம் உள்ள வேறு சொத்தினை அதாவது சர்வே எண்.418/27 னை தான் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால், சரியல்ல. சர்வே எண்.418/27 என்ற சர்வே எண் உயில் ஆவணத்தில் கிடையாது என்றால், சரிதான். எனது தாத்தா உயிருடன் இருந்த காலகட்டத்தில், சர்வே எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை ஏதும் நாங்கள் எடுக்கவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது தாத்தா, மற்றும் எனது அப்பா எப்போது இறந்தார்கள் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் பத்தி 5ல் பிரதிவாதிகள் சொத்தில் 21.11.2022ல் அத்துமீறி நுழைந்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். ஆனால் எந்த சொத்து என்று சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். உண்மைக்கு புறம்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. மரத்தை வெட்டியதாக கூறும் சொத்தானது பிரதிவாதிகள் வீடு மற்றும் அதனை ஒட்டியுள்ள காலி மனை என்றால், சரிதான், அது என்னுடைய காலி மனை. சர்வே எண் தவறாக

குறிப்பிட்டுள்ளதாக வருவாய் துறையில் மனு கொடுத்தேனா என்றால், மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். எனக்கு பிரதிவாதியின் தகப்பனார் 2000 ல் பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் சர்வே எண் தவறுதலாக உள்ளது என்று 2000 ம்ஆண்டிற்கு முன்னர் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த விபரம் எனக்கு அப்போது தெரியாது. 2000 ல் செல்லம் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில், தனது கிடப்பு மனைக்கு வடக்கு 3 ஏர்ஸ் என்று எல்லை குறிப்பிட்டிருக்கிறார் என்றால், சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வது வரை நான் பிரதிவாதிகளுடன் சுமூகமான உறவில் இருந்தேன் என்றாலும், அதனால் அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றாலும், சரியல்ல. எனவே நான் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் கேட்க தகுதியில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.